<u>2026  ஏப்ரல்  மாதம் 07– ஆம் தேதி செவ்வாய்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>O.S. நெம்பர் :  170/2021</u>

<u>2026–ஆம் ஆண்டு ஏப்ரல்  மாதம் 07– ஆம் தேதி செவ்வாய்கிழமை வாதி  தரப்பு சாட்சியாகிய வா.சா.2–வது நபரின் வாக்குமூலம்</u>

<u>(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி)</u> திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 – மாரியம்மாள் |
| கணவர் பெயர்: | மாரிமுத்து |
| ஊர்: | எல்லைப்பட்டி |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | இல்லத்தரசி |
| வயது : | 70 |

07.04.2026

**<u>(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).</u>**
**<u>சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.</u>**

**<u>முதல் விசாரணை</u>–**

நான் இந்த வழக்கில் 2ம் வாதியாவேன். வாதி தரப்பு 2வது சாட்சியாவேன். வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன் அவற்றை வாதி தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

(எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது. கையொப்பம் மட்டும் போடத் தெரியும். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை படித்துக் கேட்டு புரிந்துக்கொண்ட பின் கையொப்பம் செய்துள்ளேன்)

| | | | |
|---|---|---|---|
| 1. | எனது ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). | **வா.சா.ஆ.19** | ஒளிப்பதிவு நகல் |
| 2. | 28.11.2006 ம் தேதி இறந்துப்போன சாட்சியின் தந்தை மல்லக்கவுண்டரின் வாரிசு சான்றிதழ் | **வா.சா.ஆ.20** | அசல் |

வாதி பிராதில் கோரியவாறு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**:– 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 07.04.2026 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.04.07 16:06:10 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
07.04.2026.